





# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்


தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி



மலர் 1 இதழ் 47 19.11.2025



## ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

படித்து
பின்பற்ற வேண்டிய
முத்துக்கள்
உபதேசங்கள்

# முத்துக்கள்

## கீதா ஸாரம்

'யோகம், வேதாத்யயனம் முதலிய எந்த வழி யாலும் என்னை அடைதல் அரிது. அப்படி இருந்தும், தைத்யாள், ராக்ஷஸாள், தாழ்ந்த ஜாதியார்கள், பிரஹ்லாதன், ஸுக்ரீவன், கோபஸ்திரீகள் முதலிய அநேகர் என்னை அடைந்திருக்கிறார்கள். இவர்கள் தவம், வேதாத்யயனம் முதலிய ஒன்றிலும் பழகினவர்கள் அல்லர். இவர்கள் என்னை அடைந்ததற்கு காரணம் ஸத்ஸங்கமே. எவ்விதத்திலோ என்னோடு நேரிடவாவது, அல்லது என் பக்தர்களோடாவது ஸம்பந் தப்பட்டு மற்றைய பற்றுக் களைக் களைந்தவர்கள். முக் கியமாகக் கோபஸ்திரீகள் என்னை அடைந்து என்னோடு நேரிட ஸம்பந்தப்பட்டு நான் பிரிந்துவந்து விட்ட போதிலும் ஸதா என்னைத் தியானித்ததால்தான் பற்று நீங்கினர். முதலில் என்னை அறியாது என்மீது ஆசை கொண்டபோதிலும் ஸத்ஸங்க விசேஷத்தால் அவர் கள் மேன்மை அடைந்தார்கள். ஆதலால் உத்தவா! வேதம் முதலிய எல்லாவித மத அப்பியாஸங்களையும் கவனியாது முடிவாக என்னைக் கோபிகளுக்கு இருந்த பற்றுடன் வந்து சரணமடை! நான் உன்னைக் காப்பாற்று வேன்!' என்ற பரமரஹஸ்யத்தை வெளியிட்டார். (இதுவே கீதா ஸாரம்.)

*********************************************************

## ஸுபாஷிதம்

अर्थेने भेषजं लभ्यम् आरोग्यं न कदाचन।
अर्थने ग्रन्थसंभारः ज्ञानं लभ्यं प्रयत्नतः ।।।

அர்தேந பேஷஜம் லப்யம் ஆரோக்யம் ந கதாசந
அர்தேந க்ரந்தஸம்பார: ஜ்ஞாநம் லப்யம் ப்ரயத்நத:||

ஒருவர் வைத்திருக்கும் பணத்தைப் பயன்படுத்தி மருந்துகளை வாங்கலாமே தவிர, உடலின் ஆரோக்கியத்தை வாங்கமுடியாது. பணத்தினால் ஒரு புஸ்தகத்தை வாங்கலாமே தவிர, அப்புஸ்தகத்தில் இருக்கும் அறிவைப் பெற முடியாது.

ஆகையால்... ஒருவர் ஆரோக்யம் மற்றும் வித்யயை பெறுவதற்காக கடின முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆரோக்யமான உணவுகளை

**உட்கொள்வதினாலும், நல்ல பழக்க வழக்கங்களினால் நல்ல ஆரோக்யமும், நல்ல புஸ்தகங்களை படிப்பதினால் மற்றும் படித்து அதில் தேர்ச்சி பெற்றவர்களின் ஸஹவாஸத்தினால் நல்ல வித்யையும் கிடைக்கிறது.**

***********************************************************

**இந்த தேஹம் கர்மானுஸாரம். அநேகம் பெண்சாதிகள் எவ்வாறு ஒரு கிரஹஸ்தனை வருத்துவார்களோ அவ் வாறே மனிதனை அவனது இந்திரியம் முதலியவைகள் கண்டபடி இழுத்து கஷ்டப்படுத் துகின்றன. பகவானோ கர்மானுஸாரம் ஜன்மமெடுக்கும் ஜீவராசிகள் மோக்ஷம் அடைதற்பொருட்டே இந்த ஸ்ருஷ்டியை வெளியிட் டிருக்கிறார். இதில் மனுஷ்ய ஜன்மம் துர்லபம். அதிலிருந்துதான் மனிதன் மோக்ஷமடைய முடியும். இப் படிப்பட்ட ஜன்மம் வந்தபிறகு அது முடியுமுன் மோக்ஷம் அடைய முயலவேண்டும். ஆதலால் அகங் காரத்தைவிட்டு வைராக்யத்தை ஏற்று, செயல்படவேண்டும்.**

**********************************************************************

## சரணாகதி விஷயம்

'உலகம் காரியம் துணிபோல, பகவான் காரணம் நூல்போல. நூலைத்தவிர துணியே இல்லாததுபோல, பகவானைத் தவிர உலகமே இல்லை. பிரபஞ்சம் என் னும் விருக்ஷத்திற்கு இரண்டுவிதை. அதாவது தர்மம், தேஜஸ், அடங்கா ஆசையே அதன் வேர். முக்குணங்களே (ஸாத்விக,ராஜஸ, தாமஸம்) அதன் அடி மரம்.பஞ்சபூதங்களே அதன் அடிக்கிளைகள். பஞ்ச விஷயங்களே அதன் பழங்கள். பதினொரு இந்திரியங் களே அதன்கிளைகள். இதில் கர்மஸம்பந்தமாக இரண்டு விதப் பழங்கள் உண்டு. இதில் அழகிய இறக்கை யுடைய இரண்டு பக்ஷிகள் (ஜீவாத்மா, பரமாத்மா) இருக்கின்றன. இந்த மரம் எங்கும் பரவி இருக் றது. ஸாதாரண ஜனங்கள் துக்கம் என்னும் பழத்தையும், ஸந்யாஸிகள் ஸுகம் என்னும் பழத்தையும் தின்னுகிறார்கள். எவன் குருகிருபையால் இவ்வாறு மாறுபட்டுத் தோற்றுவதெல்லாம் ஒன்றே என்று உணருகின்றானோ அவனே ரஹஸ்யம் உணர்ந்தவன். ஆதலால் ஞானம் என்னும் கோடரியைக் குருபக்தியால் கூர்மையாக்கி இந்த விருக்ஷத்தைவெட்டிப் பகவானுள் கலந்து அந்த ஆயுதத்தையும் விட்டுவிடு. ஸாத்விக, ராஜஸ, தாமஸகுணங்கள் ஆத்மாவுடன் ஸம்பந்தப் பட்டவைகள் அல்ல. ஆதலால், முதலில் பின்னிரண் டையும் ஸத்வகுணத்தால் நாசம்செய். இதனால் பகவத்பக்தி

முதலிய நற்குணங்கள் உண்டாகும். இந்த குணங்கள் முற்றினால் (சவம் சுடும் தடிபோல) தாம் செய்யவேண்டியதாகிய மற்றைய குணங்களை அழித்தல் என்பது முடிந்ததும், ஸத்வம் தன்னாலேயே மறைந்துபோகும். எவ்வாறு மூங்கிற்காட்டிலிருந்து உண்டாகும் நெருப்புக் காட்டை எரித்துவிட்டு அணைந்து விடுகிறதோ அதுபோல ஸ்த்வமும் முடிவில் நீங்கும். இது நீங்குவதே முற்றும் துறத்தல்' என்று பகவான் விளக்கினார்.

****************************************************************************

வேதங்களில் அநுவாகம், பஞ்சாதி போன்ற பல பிரிவுகள் காண்கின்றன. யஜுர் வேதம் ஏழு காண்டங்களையும், மூன்று அஷ்டகங்கள், அருணம், (உபநிஷத்) காடகம், மந்த்ரப்ரச்னம் போன்ற பெரும் பிரிவுகளைப் பெற்றுள்ளது. இவைகளின் உட்பிரிவு ப்ரச்னம் என்றும், அதன் உட் பிரிவு அனுவாகம் என்றும், அதில் ஒன்று முதல் பல பஞ்சாதிகளும் காண்கின்றன. ஐம்பது பதங்களைக் கொண்ட பிரிவு பஞ்சாசத்தாகும் அதைத் தமிழில் பஞ்சாதி என்பர். சில பஞ்சாதிகளில் முக்யமாக ஸம்ஹிதையை தவிர மற்றவைகளில் (சாகையில்) பத்து வாக்யங்களும் காண்கின்றன. அனுவாகத்தின் இறுதியில் உள்ள பதங்களும் மீதி உள்ள பதங்கள் எத்தனை என்றும் கூறப்பெறும். இறுதிப்பதங்களைக் கொண்டு இந்த பஞ்சாதி இப்பதத்துடன் முடிவு பெறும் என உணரலாகும்.

**********************************************************

ஸ்ரீமத்ராமாயணத்தை பாரணாகதி வேதம் என்றும் ஸரணாகதி பமாஸ்த்ரம் என்றும் கூறுவர். இதிலுள்ள ஏழு காண்டங்களிலும் ஸரணாகதி தர்மமே உபதேஸிக்கப் படுகிறது. பகவானைப் பற்றின சிந்தனை ஏற்படவேண்டும் என்றால் ஒருவனுடைய கோடிக்கணக்கான பிறவிகளில் மிக அதிகமாக புண்ணியப் பிறவிகள் எடுத்திருக்க வேண்டும். அந்த பிறவிகளின் கடைசியில் தான் என்னைப் பற்றியஜ்ஞானம் அறிவு உடையவனாக ஆகிறான்.அப்படிப் பட்ட ஜ்ஞானத்தை உடையவன் மிகவும் அரிது என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் பரக்கப் பேசுகிறார்

************************************************************

இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் ஆகிய மூவரும் கடுமையான தவம் செய்து ப்ரஹ்மாவிடம் தங்களுக்கு வேண்டியதான வரத்தைப் பெற்றார்கள். அப்பொழுது எவ்வளவு பெரிய ஆபத்து வந்தபோதிலும் தர்மத்தைப் பற்றியே நினைத்திருக்கவேண்டும் என்று விபீஷணன் கேட்டுக்கொண்டதாக ஸ்ரீவால்மீகி பகவான் வர்ணிக்கிறார்.

................................................................................

கல்வி எவ்வளவு கற்றிருந்தாலும் தவறு செய்யும் காலத்தில் அது தடுக்காது. பிறருக்கு நாம் செய்யும் நல்லுபதேஸம் நாம் தவறு செய்யும்போது அந்த உபதேஸம் நமக்கு பயன்படாது. குலிங்கசகுனி என்ற பறவை ஸாஹஸம் செய்யாதே என்று கூறும். ஆனால் சிங்கம் கொட்டாவி விடும்போது அதன் வாய்க்குள் சென்று பற்களிலிருக்கும் மாமிசத் துண்டுகளை எடுத்துக் கொண்டு வெளியில் வரும், அது செய்யும் உபதேஸம் அதற்கே பயன்படவில்லை..

***********************************************************

கைகேயியைப் பார்த்து இராமன் கூறுகிறான் தாயே! நான் ஐஸ்வர்யத்திற்கு அடிமைப்பட்டவன் இல்லை. தர்மத்தை அநுஷ்டிக்கவந்த மிகச்சிறந்த ரிஷியாக என்னை நினைத்துக் கொள்ளுங்கள் என்று.

***********************************************************

எந்த பலனை அடையவேண்டுமென்றாலும் அதற்காக உழைத்தால்தான் அதனை அடையமுடியும். ஸ்வர்க்கம் சென்று ஸுகத்தையநுபவிக்க வேண்டுமென்றால் யஜேத ஸ்வர்ககாம: என்றபடி யாகம் பண்ணவேண்டும். ஐஸ்வர்யம் வேண்டுமென்றால் ஸத்ரயாகம் பண்ண வேண்டும். ஸந்ததி வாரிசு வேண்டுமானால் புத்ரகாமேஷ்டி யாகமும், நீண்ட ஆயுளுக்கு ஆயுஷ்ஹோமமும் பண்ண வேண்டும். இப்படி வேதங்களில் சொல்லப்பட்ட கர்மாக்களை முறையாகச் செய்து அந்தந்த பலனை அடையலாம்.

***********************************************************

உலகத்தில், புண்ணிய பலனை அடைந்து ஸுகமாக வாழவேண்டும் என்று நினைப்பவர்கள் அதற்கான செயலைச் செய்வதில்லை. ஆனால் பாவத்தின் பலனான துக்கத்தை விரும்பாதவர்கள் முயன்று பாபத்தைச் செய்கிறார்கள்.

***********************************************************

